உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௫௧.] மன்மத-௵—சித்திரை-மீ [பகுதி-௬.
Vol. 51. April-May—1955. No. 6.

உள்ளுறை

மணிமேகலையில் அழகுணர்ச்சி: 161
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

வில்லினும் கடிய சொல்: 181
சுப. அண்ணாமலை

மதிப்புரை: 188

காளிங்கராயன் தில்லைத் திருப்பணிகள்: 190
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955.

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனார், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி—௫௧.] மன்மத-ஞூ—சித்திரைமீ [பகுதி—௬.

Vol. 51. April-May—1955. No. 6.

மணிமேகலையில் அழகுணர்ச்சி

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

மக்களுடைய மனத்திலும் வாயிலும், அடிக்கடி பயிலும் கருத்தும் சொற்களுமாகிய இரண்டனுள் அழகு பற்றிய கருத்தும் அழகென்ற சொல்லும் தலைசிறந்தனவாகும். அழகிய சொல், அழகான செயல், அழகிய கருத்து என்ற தொடர்கள் மக்கள் உரையாடுமிடத்து மிகுதியாக வருகின்றன. அழகு என்ற சொல்லைப் பலமுறையும் பேசும் மக்களை நோக்கி அழகு என்பது யாது என்று கேட்போமாயின் அது இன்னது என நேரான விடை கூறுவோர் ஒருவரும் இலர். இந்த அழகு என்பது பற்றிப் பல அறிஞர்கள் பலவேறு காலங்களில் பலவகையாக எண்ணிப் பலவேறு முடிவுகளைக் கூறியுள்ளனர். அவருள் பிளேட்டோ, அரிஸ்டாட்டல், காண்ட், காலரிட்ஜ், ஷோப்பனவர், நீயட்சி, ரஸ்கின், ஹெகேல், குரோச்சே முதலாகப் பலர் முன்னணியில் நிற்கின்றனர். அவர்கள் வரைந்துள்ள உரையும் பொருளும் ஆராய்ந்து காணலுறின் ஒவ்வொன்றும் அழகின் ஒவ்வொரு சிறப்பியல்பைக் காட்டி அழகு என்பது "ஆயுர் தொறுந்தொறும் இன்பம் தரும் கலை" எனக் கச்சியப்ப முனிவர் உரைத்த கட்டுரைக்கு இலக்காய் நிற்கின்றது.

இன்று நிலவுலகு முழுதும் பரந்து அளப்பிலவாய்ப் பெருகி யிருக்கும் அருங்கலைகள் அனைத்தையும் தன்பாற் கொண்டு உலக முழுதுக்கும் ஒரு தனிச் செம்மொழியாய் நின்று விளங்கும் பெருமையை ஆங்கிலமொழியொன்றே பெற்றுள்ளது; ஆயினும் அதன்கண் இந்த அழகின் இயல்பைக் கூறுதற்கு பியூட்டி (Beauty) என்ற ஒரு சொல்லே உளது. இந்த அழகைப் பற்றி அஃகி யகன்ற ஆராய்ச்சிசெய்தோர் அனைவரும் இந்த ஒரு சொல்லின்கண் அடங்கி நின்றனர். அழகின் இயல்பை யுணர்த்த வேறே சொல்லொன்றும் காணப்படாமையால் உலகெலாம் பரவிநிற்கும் ஆங்கிலமொழி இன்னும் அழகின் முழு இயல்பையும் நன்கு அறியாமல் ஏக்கற்று நிற்பதை ஆங்கிலமொழிப் புலவர்கள் அறியாமல் இல்லை. E. F. காரிட் வெர்னன்லீ முதலியோர் அக்குறையை நினைந்து வருந்துதலும் செய்கின்றனர்.

இனி நம் தமிழ் மொழியை நோக்குவோமாயின், அழகு என்னும் சொல்லுணர்த்தும் பொருளியல்பை அம்மை, கவின், வனப்பு, ஏர், பொற்பு, பொலிவு, எழில், அணி, ஐ, காமர், தகை, திரு, மா, மதன் முதலிய பல சொற்கள் உணர்த்துகின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும் அழகின் ஒவ்வொரு சிறப்பினைக் காட்டுகிறது. அந்தாமரை, அஞ்செஞ்சீறடி என்ற தொடர்களில் அழகின் பொதுவியல்பை யுணர்த்தும் அம்மை யென்னும் சொல் (உம்மை யென்னும் இடைச்சொல்போல ஈறு குறைந்து) நிற்பது காணலாம். அணி யென்பது பொருளிடத்தே உள்ளீடாய் மறைந்து நிற்கும் அழகினை வெளிப்படுத்தும் கருவி; பொன்னும் பூவும் பிறவும் அழகு வெளிப்படும் நிலையமாதலின், அவற்றால் ஆகிய கலன்களும் மாலைகளும் அழகுடைய பொருளினை அணுகி அதன் அழகை வெளியிடுகின்றனவாதலால், அவ் வொற்றுமை நயம் கருதி அணியென்னும் சொல் அழகுக்காகி வருவதும் இயல்பாகவுள்ளது. "பிறர்க்கணி படுக்குமாற்றால் அணியெனும் பெயர வெல்லாம், சிறக்குமின் அனையாள்

மெய்யிற் சேர்ந்தணி பெற்று முன்னர், உறுத்தவப் பெயரின் நீங்கா வாயின. ஒருவர் தம்பால் துறுத்திடப்படார் கொல் ஒண்மை துறுத்தவர் எவர்க்கும் ஒண்மை" (தணிகை. வள்ளிநாயகி. 148) என்று அறிஞர் கூறுவது காண்க. எழில் என்பது எழுந்தோங்கி நிற்கும் பொருளின் உயர்ச்சிக்கண் விளங்கித் தோன்றும் அழகு. "நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்" என்றவிடத்து நுழைபுலம் இல்லானுடைய பொருள் முதலியவற்றால் உயர்ந்த உயர்ச்சிக்கண் தோன்றும் அழகு எழில் எனப்படுவதைக் காணலாம். நற்பண்பு நற்செய்கைகளால் தகுதி மிக்கார்பால் பிறர்கண்டு உயர்த்தி மதிக்கத்தக்கதோர் அழகு புலப்படுகின்றது. அதனை ஏர் என்பது வழக்கு. ஏர் என்னும் சொல்லும் உயரத்தே எழுவதை யுணர்த்துதலால் எழில் போல்வதாயினும், எழுகின்ற செயலிடை விளங்குதலின் இவ் வழகு ஏர் எனப்பட்டது. "நலத்தகை நல்லார்க்கு ஏர் புலத்தகை" (குறள் 1305) என்பர். கவின் என்பது இயற்கையாக நின்று காண்பார் உள்ளத்தைத் தன் அகப்படுத்திச் செயலற் றமைதியுறச் செய்யும் அழகு. "கவவு அகத்திடுமே" என்பது தொல்காப்பியம். பொருளின்கண் நிலைத்து நின்று விளங்காது ஒரு காலத்தே விளங்கித் தோன்றி நின்று பின்னர் மறைந்தொடுங்கும் அழகு ஐ எனப்படும்; ஒரொருகால் தோன்றிக் காண்பார் உள்ளத்தில் அமைதிதோற்றுவித்து வியப்புணர்ச்சியை எழுப்புவதுபற்றி இஃது ஐ எனப்படுகிறது. "ஐவியப்பாகும்" என்பர் தொல்காப்பியர். பொருளின் ஒருபுடையே தோன்றி அப்பொருள் முழுதும் நிறைந்து காண்பார் கருத்தை யீர்த்து ஒன்றுவிக்கும் அழகின் செயற்கூறு காமர் என வழங்கும். இது கமம் என்னும் சொல்லடியாகப் பிறந்து இயலுவது. அளவு, வடிவு, நிறம், முதலிய 'பண்புகளால் தகுதி முற்றும் அமைந்த பொருளிடைத் தோன்றும் அழகு தகையாகும். பெண்தகை, ஆண்டகை என்பன இதனைக் காட்டாநிற்கும். கண்டாரால் விரும்பப்படும் தன்மை சில பொருள்களிடத்துச் சிறப்பாக அமைந்திருப்பதுண்டு; அதனை அழகின் பொருள்படத் திரு என்

பது வழக்கு. திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் எனப் பேராசிரியர் கூறுவர். பொருள்களின் வன்மைச் சிறப்புப் பற்றி அவற்றின்பால் ஒருவகை அழகு தோன்றுவதுண் டாகலின் அதனை மதன் என்றும், வன்மை திண்மை முதலிய பண் பால் உளதாகும் பெருமைபற்றித்தோன்றும் அழகை மா என்றும் கூறுவர். இவ்வுலகில் மக்கள் பெறும் பொருள்களில் உயர்ந்தது பொன்; அதன்பால் விளங்கும் அழகு பொற்பு என்றும் அதன் விளக்கம் பொலிவு என்றும் வழங்குகின்றன.

இவ்வாறு பலதிறமாகக்காணப்படும் அழகின் இயல்பையும் விளக்கத்தையும் காணுமிடத்து, தூய்மையிடமாக ஒளியுடைமை புருவாகக் காண்பார் கருத்தை ஈர்த்துத் தன்பால் ஈடுபடுத்துவது செயலாக அழகு விளங்குகிறது என்பது உணரப்படுகிறது. இயற் கையும் செயற்கையுமென இருவகையால் இயலும் பொருள்களில் இயற்கைப் பொருள்களில் இந்த அழகு தானே தோன்றி நிற்பதைக் கண்டு இன்புற்று அதன்பால் அன்பு செய்து பாராட்டும் மக்கள் செயற்கைப் பொருள்களிடத்தும் அந்த அழகைத் தோற்றுவிக்கும் செயலை மேற்கொள்வதுண்டு. அங்ஙனம் தாம் தேர்ந்துகொள்ளும் பொருளின்புறத்தே செய்வன செய்து அதன்பால் அழகைத் தோற்றுவித்துக் கண்ணாரக்கண்டு இன்புறுவது மக்கள் இயல்பு. இச் செயற்கை அழகை வனப்பு என்றும், அதனைத் தோற்றுவிக்கும் செயலை வனைதல் என்றும் தமிழறிஞர் குறிப்பாராயினர். இயற்கைப் பொருளிடத்தே விளங்கும் இயற்கை யழகுக்கு இடமான தூய்மை யும், உடலான ஒளியும், கண்டார் கருத்தை யீர்த்து அன்பு செய் விக்கும் செயலும் ஆகிய மூன்றனையும் செயற்கைப் பொருளிடத்தே செயற்கைவகையில் உண்டாக்கி அழகைத் தோற்றுவிப்பது செயல் வல்லுநரின் அழகுப் பணியாகும்.

இத்தகைய அழகு, உலகியற் பொருள்களில் தோன்றிக் காண் பார் கருத்தைப் பிணித்துத் தன்பால் ஈடுபடுத்துவானேன் என்

ஒரு வினா அறிஞர் உள்ளத்தில் எழுவதுண்டு. உலகியற்பொருள்களில் உயிருள்ளன, இல்லன என இருவகை யுள்ளன. உயிரில்லனவாகிய கல், மண், இரும்பு, வெள்ளி, பொன் முதலிய பொருள்களிலும் உயிருள்ளனவாகிய மரம், செடி, கொடி, புல் முதலியவற்றிலும் மக்கள், விலங்கு, புள், வண்டு, பாம்பு, மீன் முதலியவற்றிலும் மேலே கண்ட அழகு தோன்றி இன்பம் செய்கிறது. உயிரில்லாத பொருள் வெயில், காற்று, நீர்ப்பெருக்கு முதலியவற்றால் புறநிலை திரிந்து தன்பால் அழகுண்மையைப் புலப்படுத்தக்கண்ட மக்கள் அவற்றைத் தம் செயல் வன்மையால் செம்மை செய்து அந்த அழகு விளங்கக் காண்பது இயல்பாயிற்று. ஆகவே, உயிரில்பொருள்கள் யாவும் அழகுக்கு உறையுளாய் இன்பப்பயன் நல்கும் ஏற்றமுடையவை என்பது உணரப்படுவதாயிற்று. உயிருள் பொருள்களாகிய புல், பூடு, செடி, கொடி, மரங்கள் முதல் புள், விலங்கு, மக்கள் ஈறாகவுள்ள பொருள்கள் யாவும் தோன்றுநிலை, இளமை, முதுமை, முடிவுநிலை என நால்வகை நிலை பெற்றுள்ளன. அவற்றுள் தோன்றுநிலையில் முகிழ்த்துநிற்கும் அழகு இளமைக்காலத்து எழில் மிக்கு விளங்குகிறது. அதனால் அவை பிற உயிர்ப்பொருள்களைத் தம்பால் ஈர்த்துத் தமது இனத்தைப் பெருக்கும் பணியை இனிதுசெய்து கொள்கின்றன. வேனிற் காலத்தில் மாஞ் செடி முதலியன புதுத் தளிரீன்று புதுப்பூ மலர்ந்து நிறமும் மணமும் கொண்டு திகழ்வது வண்டினங்களையும் பிற உயிர்களையும் தன்பாற் பொலிந்து விளங்கும் அழகால் ஈர்த்துத் தம் இனம் பெருகுதற்குரிய விதை தோன்றும் செவ்வியைப் பெற்றுக்கொள்கின்றன. ஏனை மாவும் புள்ளும் இவ்வாறே இளமைக்கண் விளங்கி நிற்கும் அழகால் பெண் ஆணையும் ஆண் பெண்ணையும் ஈர்த்துக் காதலாற் பிணிப்புண்டு இனம் பெருக்கும் பெரும்பணியை இனிது ஆற்றுகின்றன. இதனைத் தன் கண் முதலிய புறக்கருவியாலும், மனமாகிய அகக் கருவியாலும் அறிவு துணையாக அறிந்து அழகு பற்றுக்கோடாக மக்களுயிர் அன்பும் உறவும் உற்றுத் தன் இனம் பெருக்கிக் காத்துக்கொண்டு

வாழ்கிறது. ஆகவே, உயிருடையனவும் இல்லனவுமாகிய உலகியற்பொருள்கள் அழகுகொண்டு விளங்குவது, உலகியல்வாழ்வில் இனம் பெருகி இன்பம் விளைத்தற் கென்பது இனிது தெளியப்படும்.

இயற்கையும் செயற்கையுமாய்ப் பொருள்களிடத்தே விளங்கித் தோன்றும் அழகை ஏனை உயிரினும் மக்களுயிர் நன்கு பயன் கொள்ளுகிறது. பொருளிடத்தே பொலியும் அழகு தன் உள்ளத்தே இன்பத்தையும் அப்பொருளிடத்தே அன்பையும் உண்டுபண்ணி அதனைப் பேணி வாழச் செய்யும் செயல் நலத்தைக் கண்ட மக்களுயிர், அந்த அழகை நிலைபெற நிறுத்திக் கண்டு இன்புறுதற்கு விரும்புவதாயிற்று. ஆயினும், உயிருள்பொருள் சிறிது காலம் இருந்து பின்னர் மறைந்தொழிவதும் உயிரில்பொருள்கள் நெடுங் காலம் இருத்தலும், உயிருள் பொருளின் அழகினும் உயிரில் பொருளில் அழகு நெடிது நிலைபெறுதலும் கண்ட மக்களுயிர், இருவகைப் பொருளிடத்தும் விளங்கும் அழகை உயிரில் பொருள்களிடத்தே விளங்க அமைத்து இன்புறும் செயலை மேற்கொள்வதாயிற்று. அழகு என்பது மக்களால் செய்யப்படுவதன்று; ஆயினும் அஃது உயிரில்பொருள்களிடத்தே செயல்வகையால் தோற்றுவிக்கப்படும் இயல்புடையதாகையால், அச் செயல் வகையில் தோன்றிப் பொலிந்து இன்புறுத்தும் அழகைச் செயற்கையழகு என்பது மரபாயிற்று.

உலகியற்பொருள்கள் யாவும், தனிநிலை தொகைநிலை என்ற இருவகை நிலையினும் அழகுக்கு உறைவிடமாகும். அழகு விளங்கும் இடங்கள் மலையுச்சி, மலைச்சரிவு, கடற்கானல், காடும் காவும் கவின் பெறு அருத்தியும் யாறும் குளமும் பிறவும் எனப் பலவாயினும் அவை எப்போதும் அழகைத் தோற்றுவிப்பதில்லை. அன்றியும், நெடுந்தொலைவில் நின்று நோக்கக் காணப்படும் அழகு நெருங்கிச் சென்றவழிப் புலப்படுவதில்லை. இன்னோரன்ன குறைபாடுகளைக்

கண்ட மக்கள், அந்த அழகுக் காட்சிகளை நிழற்படங்களிலும், கிழிகளிலும், கிடைகளிலும் பொறித்துக் கொள்வதைப் பெரிதும் செய்வாராயினர். கடற்கானல் நல்கும் கவினை நேரிற் சென்று கண்களால் காண்பதிலும், அதனை ஒரு நிழலோவியத்தில் (Photography) காணின், அக்கவின் மிகச்சிறந்து விளங்குகிறது. அதுவே ஒரு கிழியில் ஓவியப்புலவன் ஒருவனால் பல்வகைவண்ணங்கள் விரவ எழுதப் பெறின், நிழலோவியம் விளக்கும் அழகினும் மிக்க அழகு விளங்கக் காணலாம். இவ் விருவகை ஓவியங்களிலும் காணப்படாத இயக்கமும் இசையும், பாட்டும் உரையும், மணமும் குளிர்ச்சியும் புலவன் கண்டுரைக்கும் சொல்லோவியத்தில் துளக்கமின்றி விளங்குவதால், அங்கே அழகு நன்கு தோன்றிப் புதுமை குன்றாது பொலிகின்றது. ஏனை ஓவியங்கள் நாள்பல கழிந்தவழி ஒளி சிறிது குன்றி அழகின் இன்பக் கூற்றினைக் குறைத்தற் கிடமுண்டு; சொலல் வல்ல இலக்கியப் புலவனது சொல் லோவியம், அத்தகைய குறைகட்கு இடமின்றி, காலமும் இடமும் வேறுபடினும் தான் வேறுபடுவதின்றி எழுதிய அன்று தோன்றிய அழகின் புதுமை நலம் குன்றாது என்றும் விளங்க நிற்கும் இயல்புடையதாகிறது. அழகு பற்றிய இந்த உணர்ச்சி மணிமேகலையாசிரியர் உள்ளத்தில் சிறப்புறமலர்ந்து நின்றமையால் ஆயிரத்து எழுநூறு எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர்க் கண்ட அழகினை இன்று நமக்குக் காட்டுகின்றார்.

காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்படாது பெருஞ் சிறப்புற்றிருந்த அந்த நாளில் ஒரு நாள் மாலைப் போதில் இயற்கையழகு தோன்றி இன்புறுத்திய திறத்தை ஆசிரியர் சாத்தனார் நம் மனக் கண்ணில் காட்டுகின்றார். ஒரு நாள் மாலைப்போதில் தாமரை நிறைந்த நீர்நிலையில் அன்னம் தன் பெடையுடன் விளையாடுகிறது; மாலைப்போது வரவும் பெடையன்னம் இருந்த தாமரைப்பூ இதழ் குவியவே அது அப் பூவுக்குள் சிறைப்பட்டது; உடனே சேவலன்னம் விரைந்து சென்று அப் பூவைக் கிழித்துத் தன் பெடையைக் கூட்டிக்கொண்டு

களைக்கண் நின்ற தென்னைமரத்தில் அமைந்த தன் கூட்டுக்குச் செல்கிறது. இதனை,

"அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை யடைக்கப்
பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்டு
ஒங்கிருர் தெங்கின் உயர்மடல் ஏற" (65)

என்று பாடுகின்றார். ஒருபால் அன்றிற்பெடை தன் அரிக்குரல் எடுத்துச் சேவல் அறியத் தெரிவிக்கிறது; பகற்போதில் பசும்புல்லும் பைங்குவளையும் மேய்ந்த பசு மாலைவரவும் மனையகத்துறையும் கன்றை நினைத்துக் கனைக்கிறது; அதன் மடி சுரந்து ஒழுகும் பால் அதன் வருகையால் தெருவிடை யெழும் புழுதியை அவிக்கிறது; மகளிர் மனையில் மணிவிளக் கேற்ற, யாழோர் மருதப்பண் பாடுகின்றனர்; ஆனிரையின் பின்னேவரும் கோவலர் குழலை இசைக்கின்றனர். பகல் ஒளி தேய இருள்பெருகிப் பரவிவரும் அந்தி மாலையின் வரவு, அமர்க் களத்தில் கணவனை இழந்து தன் தமரகம் நோக்கிவரும் ஒரு பெண் மகள் போல இருக்கிறது என்பாராய்,

"அமரக மருங்கில் கணவனை இழந்து
தமரகம் புகூஉம் ஒருமகள் போலக்
கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமொடு
அந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளால் மாநகர் மருங்கு" (65-6)

என்று இனியதோர் சொல்லோவியம் செய்கின்றார். சிறிது போதில் முழுத்திங்கள் வானத்தில் எழுகிறது. அதன் நடுவே மைபடிந்தாற் போன்ற களங்கம் யாவரும் அறிய இலங்குகின்றது; ஆயினும் அதன் நிலவு பல்வகைப் பூக்கள் மலர்ந்து பொலியும் பொழிலிடத்தே பொழி கிறது; அதனை,

"மாசறு விசும்பின் மறுநிறம் கிளர
ஆசற விளங்கிய அந்திந் தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோல்
கள்ளவிழ் பூம்பொழில் இடையிடைச் சொரிய" (67)

என்று பாடிக் காட்டுகின்றார்.

விடியற்காலம் பல்வகை முழக்கங்கள் கொண்டு அழகிய காட்சி வழங்குகிறது. ஒருபால் வலம்புரிச் சங்கங்களும் ஒருபால் புலவர் சங்கங்களும் முழங்குகின்றன; மற்றொருபக்கம் யானைகள் பிளிறக் கோழிச் சேவல்கள் கூவுகின்றன; ஒருசார் குதிரைகளின் கனைப்பொலியும் புள்ளினங்களின் பெருங்குரலும் எழுகின்றன; பூஞ்சோலைகளில் புள்ளினம் சிலைக்க, மனையகத்தே உறக்கம் விட்டெழும் மகளிரின் வளையொலிகள் இசைக்கின்றன; கடவுள் நிலையங்களில் வழிபாட்டாரவம் தோன்ற, கடைத் தெருக்களில் மலரிட்டுச் செய்யும் வழிபாடு முழங்குகிறது. இவ் வாரவாரங்கட்கிடையே காரிருள் போக்கிக் கதிரவன் கீழ் வானத்தில் கிளர்ந்து தோன்றுகின்றான்; இதனை,

வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்கப்
புகர்முக வாரணம் நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணம் குறுங்கூ விளிப்பப்
பணைநிலைப் புரவி பலவெழுந் தாலப்
பணைநிலைப் புள்ளும் பலவெழுந் தாலப்
பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பப்
பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்பக்
கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழக்
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ
ஊர்துயி லெடுப்ப உரவுநீர் அழுவத்துக்
காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்தலும் (94-5)

என்று எடுத்தியம்புகின்றார்.

பகற்போதில் அழகு வீற்றிருந்து காண்பார் கண்கட்கும் கருத்துக்கும் விருந்தாற்றி இன்புறுத்தும் இடங்களில் பூஞ்சோலைகள் தலைசிறந்தனவாகும். காவிரிப்பூம்பட்டினத்து உவவனம் ஒன்று அவ்வகையில் மிக்க பொலிவுற்று விளங்குகிறது. அதன் இயற்கையழகில் ஈடுபட்ட சாத்தனார், உவவனத்தில் வளர்ந்து மலர் நிறைந்து நறுமணங்கமழ்ந்து தோன்றும் குரவம், மரவம், குருந்து, கொன்றை,

திலகம், வகுளம், செங்கால் வெட்சி முதல் செருந்தி, வேங்கை, செண்பகம், இலவம் ஈறாகப் பல்வேறுவகைப் பூக்களையும் கண்டு,

> செருந்தியும் வேங்கையும் பெருஞ் சண்பகமும்
> எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
> வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
> சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே
> ஒப்பத் தோன்றிய உவவனம் (41)

என்று சிறப்பித்துக் கூறுகின்றார். கைவல்லோவியன் ஆங்காங்கே சிதறுண்டு பரந்துகிடக்கும் அழகுடைப்பொருள்களை ஓரிடத்தே ஒருங்கே வண்ணமும் வடிவும் வழுவின்றி அமைய எழுதிய ஓவியம் இயற்கை யழகை இனிதெடுத்துக் காட்டுவதில் மேதகநிற்பதுபற்றி உவவனத்தின் இயற்கைக் காட்சிக்கு "வித்தகரியற்றிய விளங்கிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே ஒப்ப" எனச் சித்திரச் செய்கையை உவமங்காட்டி விளக்குவது சாத்தனாரின் அழகுணர்ச்சியின் ஆழ்ந்த நலத்தை நன்கு காட்டுகிறது. செம்மண் பரந்த காடொன்றின் இடையே நீலநிறமுடைய காயாம்பூவும் வெண்ணிறமுடைய முல்லைமலரும் உதிர்ந்து கிடப்ப இடையிடையே சிவந்த நிறமுடைய தம்பலப்பூச்சிகள் மேய்ந்து தோன்றும் தோற்றத்தில் எழும் அழகைக்கண்ட சீத்தலையார், "மணிமருள் பூவை அணிமலர் இடையிடை, செம்புறதோயும் முல்லைமலரும் கிடந்த வல்லோன் செய்கையன்ன செந்நிலப் புறவின்" (அகம். 134) என வல்லோன் எழுதிக் காட்டும் ஓவியத்தோடு உவமித்துரைப்பதை வேறிடத்தும் நாம் காணலாம்.

நடுவில் ஆழ்ந்த நீர்நிலைபெற்று, சுற்றிலும் இருள்படத் தழைத்து நிற்கும் பூம்பொழில், அதன்கண் ஆங்காங்கு வண்டினமும் மயிலும் குயிலும் மந்தியும் பிறவும் வாழ்ந்து சிறக்கும் தோற்றத்தால் இயற்கை அழகை இனிது காட்டி இன்புறுத்தும் ஏற்றம் பெறுகிறது. அத்தகைய அழகு விளங்கும் பொழில் சாத்தனாரது புலமைக்கண்ணில் தோன்றுகிறது. அதன் கவின்கண்டு களிப்புற்ற அவரது

உள்ளம் குயிலிருந்து குளிர்ப்பெய்தும் பொதும்பரொன்றில் தும்பியினம் குழலிசைபோல் இயம்ப, வண்டினம் யாழ் போல் இசைக்க, மயில்கள் தம் தோகையை விரித்து ஆட, மரக்கிளைகளிலிருந்து மந்தியினம் மகிழ்ந்து நோக்கிய காட்சியில் அமைந்து நிற்கிறது. அதனை,

> இருள் வளைப்புண்ட மருள்படு பூம் பொழில்
> குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
> மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
> வெயில் நுழைபறியாக் குயில்நுழை பொதும்பர்
> மயிலா டரங்கின் மந்திகாண்பன காண் (42)

எனச் சுதமதி யென்பாள் மணிமேகலைக்குக் காட்டுவதாக நாம் மனக் கண்ணில் கண்டு இன்புறச் செய்கின்றார்.

நீர்நிலைக்கண் தாமரையின் பசிய இலைகள் நீர்ப்பரப்பை மூடிவிட ஒரு பெரிய தாமரை நீர்மட்டத்தின் உயர்ந்து நின்று மலர்ந்து விளங்க, அதன்மேல் அன்னமொன்று வீற்றிருக்கிறது; அதன் முன்னே கரையில் மயிலொன்று தோகையைவிரித்து ஆடுகின்றது; அந்நீர்நிலையில் மேயும் கம்புட்கோழி மயிலின் ஆடலுக்கு முழவு கொட்டுவதுபோல முழங்க, மரக்கொம்பில் இருந்த குயில் ஆடலுக்கும் முழவுக்கும் ஒப்ப இனிமையுறப் பாடாநிற்கின்றது; இதனை,

> பாசடைப் பரப்பின் பன்மலர் இடைநின்று
> ஒருதனி ஓங்கிய விரைமலர்த் தாமரை
> அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
> கரைநின் றாலும் ஒருமயில் தனக்குக்
> கம்புட் சேவல் கனைகுரல் முழவாக்
> கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய் (43)

எனச் சுதமதி கூற்றாக நமக்கு உரைக்கின்றார்.

மணிமேகலை காலத்துக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து ஆட்சி புரிந்த சோழன் மாவண்கிள்ளி தன் மனைவி சீர்த்தி என்பாளுடன்

பொழிலாட்டு விரும்பிச் சென்றபோது அவற்கு அப்பொழில் வழங்கிய அழகிய காட்சிகள் சாத்தனாது தமிழ்உள்ளத்தில் இன்பத்தைப் பெருக்குகின்றன. ஒருகால் கோங்கமாமும் மாமாமும் நெருங்கி நின்று முறையே பூவும் கனியும் பொற்புறக் கொண்டுள்ளன. நடுவே வெள்ளிய துய்பிணையுடைய பொன்னிறக் கோங்கம்பூ பொற்றட்டுப் போலப் பொலிந்து தோன்றுகிறது; அதன்மேல் பொருந்த வைத்தது போல மாவின் தீங்கனி பழுத்துத் தொங்குகிறது. அதன் அருகே ஒருபால் கிளி ஒன்று வீற்றிருக்க ஒருபால் மயிலொன்று உட்கார்ந்திருக்கிறது. அக் காட்சியைக்கண்ட வேந்தன், பொற்றட்டில் பாலே யேந்திக்கொண்டு பைங்கிளிக்கு மெல்ல ஊட்டும் ஒருபெண் போல மயில் அமர்ந்திருக்கும் காட்சியைப்பார் எனத் தன்தேவிக்குக் காட்டிக் கூறுகின்முன். அதனே,

> கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
> பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
> செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப்
> பைங்கிளி யூட்டுமோர் பாவையாம் (208)

என்று சாத்தனர் குறிக்கின்றூர். இவ்வாறே சோலையழகில் தோய்ந்து நின்ற சோழன் உள்ளம், மகளிர் ஏறி விளையாடுதற் கமைத்த ஊசலில் மந்தியை ஏற்றி யூக்கும் கடுவனது செய்கைகண்டு களிபெருவகை கொள்கின்றது; அது,

> மணிமலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த
> பிணவுக்குரங் கேற்றிப் பெருமதர் மழைக்கண்
> மடவோர்க் கியற்றிய மாமணி யூசல்
> கடுவன் ஊக்குவது கண்டுநகை எய்தியும்" (209)

என்பதனுல் வெளிப்படுகின்றது.

இங்ஙனம் மாவும் புள்ளும் மாமும் பொழிலும் வழங்கும் இயற்கைக் காட்சிகளில் சிறந்து நிற்கும் அழகைக் கண்டு தாம் இன்புற்றதோடு நமக்கும் காட்டி இன்புறுத்திய சாத்தனர், மக்கள் மெய்யிடைத் திகழும் இயற்கையழகை எடுத்துக் காட்டுகின்றூர். அதற்கு ஏற்ற இடமாக மணிமேகலையின் மெய்ந்நலம் மிக்குற்று விளங்குகிறது.

மணிமேகலையின் அழகு வீற்றிருக்கும் திருவுருவை இளமை கலயிக்க ஆடவர்காணின் அவளைவிட்டு நீங்க விரும்பார் என்றும், ஒரு கால் அவளது அழகில் ஈடுபடாது நிற்பாராயின், அவர் பேடியர் எனப் படுதற்கு உரியராவர் என்பாராய்,

ஆடவர் கண்டால் அகறலு முண்டோ?
பேடி யரன்றோ பெற்றியின் நின்றிடில் (29)

எனப் பொதுவாகக் கூறி உவவனத்தில் பளிங்கினலாகிய அறைக்குள் மணிமேகலை இருந்தாளாக, புறத்தே அவளது உருவ அழகு தோன் றக் கண்ட அரசன் மகனுன உதயகுமாரன்,

மேவிய பளிங்கின் விருந்தின் பாவை
இஃது ஓவியச் செய்தி என்று ஒழிவேன் (192)

என்று சொல்லி நீங்குகின்றான், எனத் தான் முன்பு கூறியதனை வற் புறுத்துகின்றார். மணிமேகலையின் புன்னகையில் தவழ்ந்த பேரழகை விளக்குமிடத்து, அவளது சிவந்த வாய்க்குள் ஒழுங்குற அமைந்து தோன்றிய வெள்ளிய பற்களை வியந்து,

ஒத்தொளிர் பவளத்துள் ஒளி சிறந்த
முத்துக் கூர்த்தன்ன முள்ளெயிற் றமுதம்
அருந் தேமாந்த ஆருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூரல் அரும்பியதுஉம் (192)

என்று கூறுவதனல் எடுத்துக் காட்டுகின்றார். இவ்வாறே தருமதத் தன் விசாகை என்பாள் இருவர் மேனியழகை, விண்ணுலகத்துத் தேவரா யன்றி மண்ணகத்து ஓவியப்புலவர் எவரும் எழுதவொண்ணு தென்பாராய்,

தரும தத்தனும் தன் மாமன்மகள்
பெருமதர் மழைக்கண் விசாகையும் பேணித்
தெய்வம் காட்டும் திப்பிய ஓவியக்
கைவினை கடந்த கண்கவர் வனப்பினர் (945)

என இயம்புகின்றார்.

இயற்கைப் பொருளிடத்தே தோன்றும் அழகை ஏனைப்பொருள்களின்கண் செயல்வகையால் தோற்றுவித்துக் காண்பது மக்களுயிர்க்குச் சிறப்பாக அமைந்த செய்கை நலம். உயிர்ப்பொருளிடத்தே அமைந்த அழகை அணி முதலியவற்றால் வனைந்தும் புனைந்தும் வெளிப்படுப்பது போல, உயிரில்லாத கிழியிலும் கிடையிலும் ஓவியம் செய்து வெளிப்படுத்தி மகிழ்வது பெரும்பான்மையாகும். இயற்கையில் தோன்றும் கடல் மலை வானம் காடு நாடு முதலியவற்றின் அழகை ஓவியத்தில் உருவுபெற எழுதிக் கண்டு இன்புறுவது மக்கள் உலகெங்கும் மலிந்துள்ளது. மணிமேகலை முதலிய பழங்கால ஆசிரியர் காலத்தில் நிழற்படமெடுக்கும் கருவிகள் காணப்படாமையால், கையாலெழுதிய கைபுனை ஓவியங்களே மக்களுயிர்க்கு அழகைக்காட்டி அன்புடைய இன்பத்தைத் தந்து வளர்த்துவந்தன. ஆதலால் அழகுணர்ச்சியில் மீதூர்ந்த நம் சாத்தனார்,

> புனையா ஓவியம் புறம் போந் தென்ன (243)
> புனையா ஓவியம் போல நிற்றலும் (177)

எனப் பல படியாலும் ஓவியச் செய்தியை உயர்த்திக் கூறுகின்றார்.

அழகு உணர்ச்சியால் அதனை உருவுபெற ஓவியம்செய்து கண்டு மகிழும் மக்களுக்கு, தாம் வாழும் மனை, விளையாடி இன்புறும் பூம்பந்தர், பொன்மண்டபம் முதலியனவும் அழகு விளங்கி இன்புறுத்தும் இடமாகப் புனைவதில் பேரூக்கம் இருப்பது இயற்கை. தாம் உறையும் ஊர்களையும் நகரங்களையும் அழகு வீற்றிருக்கும் அருமையுடையவாகச் செய்வதில் மணிமேகலைகாலத் தமிழ் முன்னோர் சிறந்து நின்றனர். அதுபற்றியே அவர்கள் பூம்புகார், பூம்புகலூர், பூங்கற்குடி, பூங்குன்றம், பூஞ்சாற்றூர், பூந்துருத்தி, பூங்கணூர் என நாடு நகரங்கட்குப் பெயரிட்டு வழங்கியிருக்கின்றனர்.

பூம்புகார் நகரத்தவர், தாங்கள் விழாக் கொண்டாடும் காலத்தில் நகரத் தெருக்களையும் வீடுகளையும் ஒப்பனைசெய்து அழகு விளங்கு

மாறு செய்கின்றனர். அவ்வாறு செய்தல் அறம் என்று தேர்ந்து அதனை மக்கள் தவறாது செய்தல் வேண்டுமென அரசும் ஆணையிடுகின்றது. இதனை,

தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்
கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும்
மதலைமாடமும் வாயிலும் சேர்த்துமின் (16-7)

என்று விழா முதல்வர் நகரமக்களுக்கு ஆணை யிடுவது கொண்டு அறிகின்றோம்.

செல்வருடைய செல்வ மனைகள் செங்கற்களாலும் சுதையாலும் கட்டப் பெற்று உயர்ந்து நிற்கின்றன. அம் மனைப்புறங்களில் வானவர் முதல் மக்களும் பிறவுமாகிய உயிர் வகைகளை ஓவியம் செய்து காண்போர் கண்டு இன்புறுமாறு அமைத்துள்ளனர். இதனை,

சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவ ரோவியம் கண்டு நிற்குநரும் (37-8)

என்பதனால் அறிக. செல்வத்தால் சிறப்புற உயர்ந்த மனைகள் புறவழகு பெற்றுப் பொலிவது ஒருபுறம் இருக்க மனையுறை மகளிரின் மனம் பண்பாலும் கற்பு நலத்தாலும் கவின்பெற வேண்டும் என்பது அழகுணர்ச்சியும் அதற்குரிய அறவுணர்ச்சியும் சிறக்கப் பெற்றவர் கருதுவாராதலால்,

குளனணி தாமரைக் கொழுமலர் நாப்பண்
ஒருதனி யோங்கிய திருமலர் போன்று
வான்றரு கற்பின் மனையுறை மகளிரின்
தான்தனி யோங்கிய தகைமைய ளன்றே
ஆதிரை நல்லாள் அவள்மனை இம்மனை (168)

என்று அந்த மனையழகையும் மாண்புறக் காட்டுகின்றார்.

மக்கள் விளையாடி இன்புறும் பூம்பந்தர்கள் இன்பப்பேறு ஒன்றே குறித்துச் செய்யப்படுவனவாதலால், அவ்வின்பத்துக்கு ஆக்கமாகும் அழகு அப்பூம்பந்தர்களில் செவ்வையாக அமையச் செய்வது இயல்பு. அதற்கேற்பப் பூம்பந்தரின் கீழே பொன்னிறம் பெற்ற தூணும் பல நிற மணிகள் இழைத்த போதிகையும், ஓவிய மெழுதிய விதானமும் அமைத்த பொன்வேய்ந்த மண்டபம் ஒன்று சோழ வேந்தன் தன் தேவியுடன் இருந்து அழகின்பம் நுகர்தற்கு அமைக்கப்பெற்றுள்ளது. அதனை நம் சாத்தனார்,

பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமம் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பின்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபம் (212)

எனப் புனைந்துரைக்கின்றார்.

இவ்வாறு அழகு விரும்பும் உள்ளமும் அதனைப் பேணிப் புரக்கும் செய்கையுமுடைய வேந்தன் இருந்து நாடுகாவல்புரியுமிடத்து அவனது அரசியலிலும் அழகு வீற்றிருக்குமன்றோ? அழகுணர்ச்சி மிக்க புலவரது புலமை அதனையும் கண்டு நமக்குக் காட்டுவது புலமைப்பணிதானே. உலகில் வாழப்பிறந்த உயிர்க்கு வாழ்வுக்குரிய தொழிலும் உடன்பிறக்கிறது. தான் செய்யும் தொழிலால் விளையும் பயனை அவ்வுயிர் பெறுவது உரிமையாதலின், அதற்கு இடையூறும் இடையீடும் தோன்றாதவாறு காப்பதும், தோன்றியவழி

அவற்றை நீக்குவதும், அவ்வகையில் உளவாகும் பிணக்குகளை நீக்கி முறைசெய்வதும் குறைபோக்குவதும் அரசியலின் பொதுச் செயல்கள். அச்செய்கைகளைச் செய்யும் உரிமையை அரசியல் பெற்று விளங்குகிறது. அரசனது அரசியல் அவ்வுரிமையுணர்ந்து அறம் பிழையாது தன் பணியை ஆற்றும்போது அதன்பால் அழகு தோன்றி அதன்கீழ் வாழும் உயிர்கட்கு இன்பம் நல்குகிறது.

காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலைபால்சென்ற உதய குமரனை, உண்மையறியாது ஒளித்திருந்த காயசண்டிகை கணவன் வாளால் எறிந்து கொன்ற செய்தியைக் கேள்வியுற்ற சோழவேந்தன் தவறு செய்த உதயகுமரனைத் தண்டிப்பது அரசன் செய்கையாக இருப்ப, அதனைத் தான் மேற்கொண்டு காயசண்டிகையின் கணவன் செய்தது முறையன்று என்பானாய்,

யான்செயற் பாலது இளங்கோன் தன்னால்
தான்செய் ததனால் தகவிலன் விஞ்சையன்

என்று கூறுவதும், கொலையுண்டிறந்த உதயகுமரன் தனக்கு மக னாதலின், அவன் இறந்ததுபற்றி வருத்தமுறாது, அரசியல் அறமே நினைந்து,

மகனை முறை செய்த மன்னவன் வழியோர்
துயர் வினையாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்
ஈங்கு இவன் தன்னையும் ஈமத் தேற்றிக்
கணிகை மகளையும் காவல்செய்க என்றனன்

இதன்கண் தன் மகன் தவறு செய்து தகவிலான் ஒருவனால் கொலை யுண்டதனால் பிறக்கும் மானத்துக்கு வேந்தன் நாணி, இது பிற வேந்தர் செவிபுகுவதன்முன் மகன் உடலை ஈமத்து ஏற்றுக என்ப தும், அதுபற்றி மணிமேகலைக்கு நாட்டவர் தீங்கு யாதும் செய்யாத வாறு பாதுகாப்பளிப்பானாய், கணிகை மகளையும் காவல் செய்க என் பதும் அரசியலின் அழகை நாம் அறிந்து நன்கு மதித்து இன்புறச் செய்கின்றன.

அரசியலின் அழகு காட்டிய ஆசிரியர், நாடகமகளிர்பால் பொருந்தும் ஆடல் பாடல் அழகு என்ற மூன்றனுள் அழகாவது இன்னது என்பாராய்,

நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை

என்பதனால் விளக்குகின்றார்.

அழகு விரும்பும் மக்கள் அகத்தும் புறத்தும் அது வீற்றிருந்து அவரது சொல்லிலும் செய்கையிலும் வெளிப்பட்டுத் தோன்றும் என்பது அறிஞர் அறிந்துரைக்கும் உண்மை. செய்கை வாயிலாக அழகு வெளிப்பட்ட திறத்தை இதுகாறும் கண்டோம். இனி மனத்தின்கண் கிடந்து சொல் வழியாக விளங்கித் தோன்றும் அழகைக் கண்டோமாயின், அழகுணர்ச்சியின் நலத்தை நாம் ஒருவாறு கண்டவராவோம்.

மணிமேகலை உதயகுமரனுக்கு அஞ்சிப் பளிக்கறை புகுந்து மறையவும், உதயகுமரன் அவ்விடம் போந்து சுதமதியைக் கண்டு "சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழீஇ, நிறையு முண்டோ காமம் காழ் கொளின், மணிமேகலை செவ்விய ளாயின் என் செவ்விய ளாகுக" எனத் தான் தீரா வேட்கை மிக்குத் திரிவதைத் தெரிவித்துச் சுதமதியின் வரலாறு கேட்டானாக, அறிவு திரிந்து நிற்கும் அவன் தன் வரலாறு கேட்பின் தனக்குத் தவறு செய்தலும் கூடும் என அஞ்சி,

வார்கழல் வேந்தே வாழ்கநின் கண்ணி
தீநெறிப் படரா நெஞ்சினை யாகுமதி (67)

என்பது அவளது உள்ளத்தில் உயர்ந்து நிற்கும் அழகினை நமக்கு அறிவிக்கின்றது. உதயகுமரன் நீங்கியதும் வெளிவந்த மணிமேகலையின் உள்ளம் உதயகுமரன்பால் செல்லுகிறது; ஆயினும், அவளது உண்மையறிவு அவன்பொருட்டு அவள் உள்ளத்தெழும் காதற் காமத்தைத் தடுக்கிறது. அந் நிலையில் அவள் உள்ளத்தில் வீற்றிருக்கும் அழகு, அறிவைப் பணிகொண்டு, "கற்புத்தான் இலள், நற்றவ

உணர்விலள், வருணக் காப்பிலள், பொருள் விலையாட்டி" என்று இகழ்ந்த நோக்கத்துடன் உதயகுமரன் தன்பால்வந்தான் எனநினைந்து காதல் வயப்பட்டு மெலியும் தன் அறிவை வன்மை யுறுவித்து,

இகழ்ந் தனனாகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போயது என்நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை?
இதுவே யாயின் கெடுக தன்திறம் (62)

என்று மணிமேகலை தன் மனத்தழகு விளங்க வாய்விட்டுக் கூறுகின்றாள்.

கோதமை என்பவள் இறந்துபோன தன் மகனைச் சம்பாதி என்னும் தெய்வத்துக்குக் காட்டி, "என் உயிர்கொண்டு இவனது உயிரைத் தருக" என்று கேட்க, அவளுக்கு அச் சம்பாபதி, ஒருவர் இறந்தால் வேறொருவர் உயிர் கொடுத்து இறந்தவர் உயிரைப் பெறுவது இயலாத தொன்று என்பாளாய்,

உலக மன்னவர்க் குயிர்க்குயிர் ஈவோர்
இலரோ? இந்த ஈமப்புறங் காட்டு
அரசர்க் கமைந்தன ஆயிரம் கோட்டம்

என்று சொல்லுவது சுருங்கச் சொல்லும் உரையழகுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

வேள்வியிற் கொல்வதுகுறித்துக் கொண்டுவரப்பட்ட ஆவின் பொருட்டு உரையாடலுற்ற ஆபுத்திரன், வேதியர் உள்ளத்தில் இரக்கமுண்டாகப் பேசுமிடத்து,

விடுநில மருங்கில் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கில் மக்கட் கெல்லாம்
பிறந்த நாள்தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை?

என்பது இரக்கப் பண்பின் எழிலை இனிது காட்டுகின்றது.

உதயகுமரன் கொலையுண்டதற்கு மணிமேகலை காரணமாதலை எண்ணி அவட்குத் தீங்கு செய்துவருந்திய இராசமாதேவிக்கு மணிமேகலை,

பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை;
உடற்கழு தனையோ உயிர்க் கழுதனையோ
உடற் கழுதனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்கா— டிட்டனர் யாரே
உயிர்க் கழுதனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்

எனத் தான்கூறும் பொருளை ஆய்ந்து பகுத்துரைப்பதும்,

"பிறந்த முற்பிறப்பை எய்தப் பெறுதலின்
அறிந்தோர் உண்டோ?"

என்று சொல்லி நகைபாடிய பூதவாதி அநுமான அளவையை ஏற்க மறுப்பதை மிக நாகரிகமாக மறுக்க முற்பட்ட மணிமேகலை,

நின்தந்தை தாயரை அனுமானத் தால்அல்லது
இந்த ஞாலத்து எவ்வகை அறிவாய்
மெய்யுணர் வின்றி மெய்ப் பொருளுணர் வரிய

என்பதும் சாத்தனார் உரைபாட்டிலும் அழகு விளங்கக் கண்டு காட்டு நலத்தைப் புலப்படுத்துகின்றன.

இயற்கையும் செயற்கையுமாகிய இருவகைப் பொருள்களையும் இடமாகக் கொண்டு, உடற்குள் உறையும் உயிர்போல் தனது உண்மை காட்டிக் காண்பார் கருத்தைப் பிணித்து இன்பத்தில் ஈடுபடுத்தும் அழகின் இயல்பை நன்கு உணர்ந்து தான் பெற்ற அழகின்பத்தை நமக்கும் வழங்குதற்கு ஆசிரியர் சாத்தனார் மணிமேகலை என்ற இலக்கியத்தைக் கருவியாகக் கொண்டுள்ளார். இதன்கண் காணப்படும் நாடு நகரங்களும் நீர்நிலைவும் பூஞ்சோலையும் பூம்பந்தரும் பொன்மண்டபமும் ஆடவரும் பெண்டிரும் அரசரும் அறவோரும் மாவும் புள்ளும் மலையும் கடலும் யாவும் அழகு வீற்றிருக்கும் அரிய கலைக் கோயில்களாக அமைத்துக் காட்டுவதில் சாத்தனாரின் சீரிய அழகுணர்ச்சி சிறந்த பணி புரிந்திருக்கிறது என்று கூறி இச் சிற்றுரையை முடிக்கின்றோம்.

வில்லினும் கடிய சொல்

திரு. சுப. அண்ணாமலை, B. O. L. (Hons) தமிழ் விரிவுரையாளர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

உள்ளத்திற் பிறக்கும் உணர்ச்சிகளுக்கு வடிவு கொடுத்துச் சொல்லோவியமாகத் தீட்டும் கவிதைகள் என்றும் இறவாத் தன்மை பெற்றவையாகும். பல்வகையாகத் தோன்றும் உணர்ச்சிகளுள் அவல உணர்ச்சி அமையப் புனையும் கவிதைகள் கலையுணர்வுடையார்க்குக் கழிபேருவகை தருகின்றன. வாழ்க்கையில் கணக்கற்ற துன்பங்களைக் கண்டு இடருற்று வருந்தும் மனிதர், நாடகத்தில் துன்பக் காட்சிகளைக் கண்டு நுகருவதில் ஒரு தனிவகையான இன்பம் (Pleasure) பெறுகின்றனர். அவல நாடகங்களின் வெற்றிக்குக் காரணம் இதுவே. இவ்வின்பம் கலையுணர்வால் எழும் இன்பம். இதே போன்ற இன்பந்தான் அவலஉணர்ச்சியைக் குழைத்து இயற்றப் பட்ட கவிதைகளைப் பயிலும் போதும் ஏற்படுகின்றது. வாழ்க்கையில் நேரும் துன்பம் வருத்தத்தையும் கலைவடிவில் காணும் துன்பம் இன்பத்தையும் அளிக்கின்றன.

நுண்கலைகள் (Fine Arts) ஐந்தனுள்ளும் இலக்கியக்கலை தலையாய சிறப்புப் பெற்றதாகும். பிற கலைகளாகிய ஓவியத்தாலும் சிற்பத்தாலும் உணர்ச்சி வெள்ளத்தை உருவாக்கிக் காட்ட இயலாது. ஏதேனும் ஒரு நிலையையே அவற்றால் தெளிவுறக் காட்ட இயலும். ஆயின் கவிதை யிலக்கியமோ வெனில், கடல்போல் பெருகிய உணர்ச்சியையும் தேர்ந்தெடுத்த விழுமிய சொற்களில் தேக்கிக் கருத்துக்கள் பலவற்றைக் காட்டி, அறிவு விருந்தாய், உணர்வுக்கு நல்லமுதாய்க் கற்போர் உள்ளத்தைக் கனிந்துருகச் செய்துவிடும். இன்னும் கவிதைக் கலையின் மாட்சியினைச் சொல்லப்புகின் விரியுமென்றஞ்சி விடுக்கின்றேன்.

சங்கத்துச் சான்றோர் புனைந்த அகப்பொருட் பாடல்களுள் பாலை, நெய்தல் என்னும் இருதிணைகளையும்பற்றி எழுந்தவை தனிச் சிறப்பும் சுவையும் உடையனவாக விளங்குகின்றன. இவற்றுள்

அவலச் சுவை மிகுதியும் உள்ளமையே இச் சிறப்பிற்குக் காரணமாகும். 'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையில் இத் திணைகள் அமைந்தனவாகத் தொகுக்கப் பட்டுள்ள கவிதைகள், கற்போர் உள்ளத்தை உணர்ச்சிப்பிழம்பாகச் செய்கின்றன. அவற்றைப் பயிலுபவர் தம்மை மறந்து சுவைநுகர்ச்சியில் ஈடுபடுவர். அவல உணர்ச்சி அவற்றின் சொல்தோறும், வரிதோறும் அமைந்து நிற்கின்றது. ஆங்கில நாடகங்களுள்ளே, ஷேக்ஸ்பியரின் அவலநாடகங்களைக் கற்று மகிழ்பவர், கலித்தொகையில் உள்ள அவலச் சுவை கனியும் கவிதைகளைக் காண்பாராயின், "எந்தமிழ் மொழியிலும் இத் துணைச் சுவையுளதோ, இதுகாறும் அறியாது போயினமே" எனக் கழிவிரக்கம் கொள்வர். சங்க இலக்கியங்களைக் கற்க முற்படுவார்க்கு அவற்றின் நடை இடர் தருகின்றது அக் காலத்திருந்த பல சொல் வழக்குகள் இக் காலை இல்லாது போயினமையால், சங்கக் கவிதைகளின் பொருள் தெளிவுற விளங்காமல், சுவை நுகர்ச்சிக்குத் தடை உண்டாகிறது. இந்நிலை எல்லா மொழிகளிலும் உண்டு, ஆங்கில மொழியில் பழைய ஆங்கிலம் என்றே ஒரு தனிப் பிரிவு உள்ளது. அதிலமைந்த இலக்கியங்களைக்கற்பது சங்கத்தமிழ் இலக்கியங்களைக் கற்பதினும் பேரிடர் தரும். பழைய ஆங்கிலத்தின் நடைக்கும் சொல்லமைப்பிற்கும் இப்பொழுது வழக்கிலிருக்கும் ஆக்கிலத்தின் நடைக்கும் சொல்லமைப்பிற்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் உண்டானமையே இவ்விடருக்குக் காரணம். ஆயின், நம் தமிழ் மொழியின் நிலை அவ்வாறில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிருந்த பல சொற்கள் இப்பொழுது வழக்கொழிந்தும் பொருள் மாறியும் நிற்கின்றனவேயன்றிச் சொல் அமைப்போ, சொற்றொடர் அமைப்போ, அடிப்படை மொழியியல்புகளோ ஒரு சிறிதும் மாறாமல் அன்றுதொட்டு இன்றுவரை இருந்து வருகின்றன. மொழி நடை காலத்திற்குக் காலம் சிறிதளவு மாறுபட்டுவந்திருக்கின்றது. ஆகவே பழைய ஆங்கிலத்தைக் (Old English) கற்பார்க்கு வரும் அத்துணைப் பேரிடர் சங்கத்தமிழைப் பயிலுவார்க்கு நேராது என்பது உறுதி. இச் சொற்களோடு முன்னுரையை நிறுத்திக் கலித்

தொகையில் கனியும் அவலச் சுவையினை நுகருவான் வேண்டி ஒரு கவிதையை விளக்க முற்படுகின்றேன்.

அறிவும் ஆண்மையும் செறிந்த ஆடவன் ஒருவனும் ஓவியத்தில் எழுத வொண்ணாத உருவமும் ஒப்புயர்வற்ற நாணமும் இளம் பருவத்து எழிலும் உடைய மங்கை ஒருத்தியும் நல்லூழ் வயத்தால் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றி ஒருவரை யொருவர் தனித்துக் கண்டு தம்வய மிழந்து காதலென்னும் கயிற்றாற் பிணிப்புறுகின்றனர். அந்த மங்கைநல்லாளின் உயிரெனப் பழகும் தோழி அவர்களது காதல் வளர உறுதுணை புரிகின்றாள். காதல் பிறந்த தினைப் புனத்தே சின்னாள் பகற்பொழுதில் வந்து காதலியைக் கண்டு அளவளாவிய ஆடவன், அவள் தினைப்புனத்தை விட்டுப் பெற்றோர் வாழும் மனைக்குச் சென்ற பின்னர், இரவு வேளையில் அங்குச் சென்றுவரத் தொடங்குகின்றான். அவன் வருகையால் ஊரார் பலவாறு ஐயங் சொள்வர் என்றும், அவர்கள் உண்மையை அறிய நேரின் பழிச் சொல் பிறக்கும் என்றும், பழியைத் தாங்கிக்கொண்டு தலைவி உயிர் வாழாள் என்றும் பலவாறு கூறி விரைவில் உலகியற் படி திருமணம் செய்து கொள்வதற்கு ஆவன இயற்றுமாறு தோழி அவனை வேண்டுகிறாள். யாதுகாரணம் பற்றியோ அவளது வேண்டுகோளைச் செவியில் ஏற்காமல் மீண்டும் மீண்டும் இரவு வேளையிலேயே தலைவன் வருகின்றான். அவன் வரும் வழியோ விலங்குகளும் சுனைகளும் முட் புதர்களும் நிறைந்த காட்டுவழியாகும். கையில் ஏந்திய வேலொன்றே துணையாக, இடி யிடித்தாலும் மழை பொழிந்தாலும் பொருட்படுத்தாமல் காதலியைக் காணவந்த அவனது அன்பு அவளை மிகவும் மகிழ்விக்கின்றது. எனினும் வழியில் அவனுக்குத் தீங்கு நேரின் என் செய்வது என்று அவள் அஞ்சுகிறாள். தோழியின் வாயிலாக அவ் வச்சத்தை அவனுக்குத் தெரிவித்து இரவில் வர வேண்டாம் எனத் தடுக்கச் செய்கிறாள், தோழி எவ்வாறு கூறியும் அவன் ஒத்துக்கொள்ளவில்லை. களவில் வந்து காதலியைக் காணுவதில் தனி யின்பம் பெற்றான் போலும்.

திருமணத்திற்கு முயற்சி செய்யாமல் தலைவன் காலந் தாழ்த்தியதால் தலைவிக்கு வேறுபல இடையூறுகளும் ஏற்படுகின்றன. அவளது உள்ளத்தில் வளரும் கவலையால் உடல் நாளுக்கு நாள் மெலிகின்றது. தலைவன் சிலநாள் வாராமலிருப்பதினும், அவன் வந்தும் காணமுடியாமல் தடை ஏற்படினும் அவளது நெற்றியில் சிறிதே வெளிர் நிறம் பரவும். அவளிடம் உண்டான இம் மாறுதல்களைக் கண்ட, தாய் ஐயங்கொண்டு கட்டுக் காவலை மிகுதிப் படுத்தி, இரவும் பகலும் தானே மகளின் அருகில் இருந்து விழிப்பாகக் காவல் செய்யத் தொடங்குகிறாள். இரவெல்லாம் அருகிலேயே படுத்துத் துயிலும் தாய்க்குத் தெரியாமல் எழுந்து சென்று, வீட்டுக்கு வெளியே வேலியோரத்தில் வந்து காத்து நிற்கும் காதலனைக் காண்பதில் அவளுக்கு நேரும் அச்சமும், துன்பமும் மிகுதியாகும். தாய் துயிலாது விழித்திருப்பாளாயின் அவனைக் காண இயலாமல், வருத்தத்தோடு இருக்க நேரிடும். இவ்வாறு எத்துணைநாள் அவன் பிரிவால் அல்லற் படுவது என்று தலைவி கவலை யுறுகிறாள். அவளது துன்பங்களை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் எடுத்துக் கூறியும் தலைவன் வாளாவிருப்பதுகண்ட தோழி, தலைவியின் வாய்ச்சொற்களின் வாயிலாகவே அவளது உள்ளத்திற் குமுறும் துன்ப அலைகளின் ஒலியை அவன் கேட்கவேண்டும் என்று கருதி, நீண்டநாள் பிரிவுக்குப் பிறகு ஒரு நாள் இரவு அவன் வீட்டு வேலிப்புறமாக வந்து நிற்கும்போது, தலைவியிடம் பேசத்தொடங்கி, அவன் செவியிலும் விழுமாறு, "அம்மா! தலைவன் திருமணத்திற்கு உரியனவற்றை விரைந்து செய்வான்; அதுகாறும் பொறுத்திருத்தலை விட்டு வருந்திக் கலங்குவதும் புலம்புவதும் நம் கன்னிமைக்கு அழகன்று; இதைத் தாயும் பிறரும் காணின் பழியும் துன்பமும் உண்டாகும். உனக்கு வேறு இடத்தில் மணம் முடிப்பினும் முடித்துவிடுவர். ஆதலின் பொறுமையாக இரு" என இடித்துரைக்கின்றாள். மிகநுண்மையான உணர்வுடைய தலைவியின் உள்ளம் தோழியின் வன்புறையால் மிகவும் நோகிறது. அன்பு செய்த காதலரைப் பிரிந்திருப்பதால் தன் உள்ளத்தில் நீண்டெரியும் துன்பநோயைச் சொற்களில் குழைத்துக் கண்ணீர் சிந்தியவாறு அவளுக்கு விடை கூறுகின்றாள்:

தோழி! நமக்குத் தலைவர் அளித்த வேட்கை நோய் அளவில் மிகப் பெரியது; என் உயிரோ மிகச் சிறியது. ஆதலால் உயிரின் குணமாகிய நாணத்தை, வேட்கையோடு போராடிக் காப்பாற்றுதல் என்பது இயலாத செயலாகி விட்டது. அவர் பிரிவால் நான் தூங்காமல் துன்புற்றுக் கழித்த இரவுகள் மிகப் பல. தனித்திருந்து வருந்தும் அந்த நடுயாம வேளையில், துணையைப் பிரிந்து துன்பக் குரலெடுத்துக்கூவும் சில அன்றிற் பறவைகளே என்னைப்போல வருந்தி எனக்குத் துணையாக இருக்கின்றன. என் உள்ளத்திலும் உடலிலும் பொங்கும் வேட்கைத் தீயால் சூடேறப் பெற்ற எனது அணிகள் ஒலிக்கும்படி படுக்கையில் புரண்டு, அழகிழந்த மயில்போல நடுங்கி வருந்தும்படி, நம்மோடு அவர் கூடியிருக்கும்போது மகிழ்வித்த அவரது புன்னகையின் விளைவு தீயாக மாறி நின்று சுடுகிறது.

"இப்பொழுது பிரிந்திருக்கும் காதலர், உன்னை என்றும் பிரியேன்" எனக்கூறி முன்பு நம்மைத் தேற்றிய சொல்லால், எனது மெல்லிய நெஞ்சில் இன்று துன்பம் பெருகும்படி எய்தனரே யல்லாமல், தொழில் வல்லவன் சிறப்புற அமைத்த விசைபொருந்திய வில்லால் நம்மை எய்தாரில்லை. ஆயினும், தோழி! வில்லால் விளையும் துன்பத்தைக் காட்டிலும் அவர் சொல்லால் விளைந்த துன்பம் கடுமையுடையதாக இருக்கின்றது.

அவரது அன்பால் என்னிடத்தில் தோன்றிய புன்னகையை மறைத்து நாணி நின்ற எனது கருத்தை உணர்ந்து முதன் முதலில் என்னைக் கூடி மகிழ்ந்த அவரது உயர்ந்த பண்புகளால் இப்பொழுது நம்மை வருத்துகிறாரே யன்றி, மனத்தில் பலவகையாகத் தோன்றி வளரும் பழைமையான கருத்து மாறுபாடு காரணமாக மனிதரிடையே உண்டாகும் பகைமையை என்பால் காட்டி வருத்தவில்லை. ஆயினும், தோழி! பகைமையால் விளையும் துன்பத்தைக் காட்டிலும், தகுதிமிக்க பண்புகளால் அவர் தரும் துன்பம் கடுமையுடையதாக இருக்கின்றது.

"நீ இல்லாமல் வாழ மாட்டேன்" என்று கூறி, அன்பினால் என்னை வயப்படுத்தித் தமது மென்மைப் பண்பினால் இன்று சுடு

இன்றூரே பன்றி, இருளையும் பனியால் வரும் நடுக்கத்தையும் நீக்கி நீண்டெரியும் தியால் சுட்டாரில்லை. ஆயினும், தோழி! அவரது மென்மையால் என் உள்ளத்தில் விளைந்து எரியும் வேட்கை நோய் தீயைக் காட்டினும் கடுமையுடையதாக இருக்கின்றது.

பிரியேன் எனத் தாம் சொல்லிய சொல்லாலும், பேணி வளர்த்த காதற்பண்பாட்டாலும், பெரிதும் இனிய தமது மென்மையாலும் நம்மைத் துயரத்தில் ஆழ்த்திப் பிரிந்திருக்கின்றூர் காதலர். அவர் நமக்கு அளித்த நோய், நம்மால் தாங்க முடியாத அளவை உடைய தாய் நீங்காமல் நின்று வாட்டுகிறது. இந்நிலை இன்னும் நீளுமாயின் என் உயிர் நில்லாது. கூற்றுவனது தலைவாயிலில் நிற்கும் எனது உயிரை மீட்டுத்தரும் மருத்துவராக அவர் ஆவாராயின், இந்த நோய் என்னை வருத்தி நிற்குமோ? நில்லாது மறைந்தொழியுமே!

கூடியிருக்கும்போது குளிர்ந்து, பிரிந்தால் சுடுகின்ற காமநோய் எத்தகையது என்பது தலைவியின் சொற்களால் தெளிவாக விளங்குகிறது. பிரியேன் என்று சொல்லிய சொல்லைக் காவாமல் தலைவன் நெடுநாள் பிரிந்திருப்பதும், வரைவுக்கு முயலாததும் தலைவியின் உள்ளத்தைக் கவர்ந்த அவனது பிற நற்குணங்களுக்கெல்லாம் மாறுபட்டுநின்று அவளை மிகவும் வாட்டுகின்றன. இதையே, 'சொல்லால் எய்தார்' என்றும் 'பண்பால் வருத்துகிறூர்' என்றும் 'மென்மையால் சுடுகிறூர்' என்றும் அவள் குறிப்பிடுகிறுள். அவர் வில்லால் எய்தாலும், பகைமைகொண்டு வருத்தினுலும், தீயால் சுட்டாலும் பொறுத்துக்கொள்ளலாம்; ஆனுல் சொல்லாலும், பண்பாலும், மென்மையாலும் வருத்துவது பொறுக்க இயலாத கொடுமை என்று கருதி அவள் கூறும் சொற்கள் உள்ளத்தை உருக்குகின்றன.

அரிதே தோழி, நாண் நிறுப்பாம் என்(று) உணர்தல்
பெரிதே காமம்என்; உயிர்தவச் சிறிதே,
பலவே யாமம் பையுளும் உடைய
சிலவே நம்மோடு உசாவும் அன்றில்
அழல்அவிர் வயக்(கு)இழை ஒலிப்ப உலமந்து
எழில்எஞ்சு மயிலின் நடுங்கிச் சேக்கையின்
அழல்ஆகின்(று) அவர் நக்கதன் பயனே;

மெல்லிய நெஞ்சு பையுள் கூரத்தம்
சொல்லினுன் எய்தமை அல்ல(து) அவர்நம்மை
வல்லவன் தைஇய வாக்(கு) அமை கடுவிசை
வில்லினுன் எய்தலோ இலர்மன்; ஆயிழை,
வில்லினும் கடி(து)அவர் சொல்லினுள் பிறந்தநோய்
நகைமுதலாக நட்பினுள் எழுந்த
தகைமையின் நலிதல் அல்ல(து) அவர்நம்மை
வகைமையின் எழுந்த தொல்முரண் முதலாகப்
பகைமையின் நலிதலோ இலர்மன்; ஆயிழை,
பகைமையிற் கடி(து)அவர் தகைமையின் நலியும்நோய்;
நீயலேன் என்(று) என்னை அன்பினுல் பிணித்துத்தம்
சாயலிற் சுடுதல் அல்ல(து) அவர் நம்மைப்
பாய்இருள் அறநீக்கும் நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினுல் சுடுதலோ இலர்மன்; ஆயிழை,
தீயினும் கடி(து) அவர் சாயலின் கனலும்நோய்;
ஆங்கு,
அன்னர் காதலராக அவர் நமக்(கு)
இன்னுயிர் போத்தரும் மருத்துவர் ஆயின்
யாங்(கு) ஆவதுகொல் தோழி, எனையதூஉம்
தாங்குதல் வலித்(து) அன்(று) ஆயின்
நீங்(க) அரி(து) உற்றன்(று) அவர் உறீஇய நோயே.

கலித்தொகை : 137. பாடியவர் : நல்லந்துவனுர்.

[நிறுப்பாம் - நிறுத்துவோம்; பையுள் - துன்பம்; உசாவும் - விசாரிக்கும்; உலமந்து - சுழன்று; தைஇய - அமைத்த; முதல் - காரணம்; போத்தரும் - மீட்டுத்தரும்; வலித்துஅன்று - அளவை உடையது அன்று உற்றன்று - தங்கியது; உறீஇய - உறுவித்த, அளித்த.]

*மதிப்புரை

மெய்கண்ட சாத்திரம்: போற்றிப் பஃறொடை முதலியன பழைய உரையுடன்.

பக். 16. /8/118. விலை 12 அணா. திருவாவடுதுறையாதீனம். 1954

இச் சிறு நூல் சைவசித்தாந்த நூல்களாகிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கில், உமாபதிதேவநாயனார் இயற்றியவற்றுள், போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம் என்பவற்றின் மூலங்களையும், நமச்சிவாயத் தம்பிரான் உரையையும் தன்னுட்கொண்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனத்தால், அவ்வாதீன வித்துவான் த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெற்று வெளியிடப்பெற்றுள்ளது. முகவுரையில் பதிப்பாசிரியர் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கில் இங்குக் கூறப்பெறும் நாலு நூல்களும் பெறும் இடம், அவற்றின் தன்மை முதலியவற்றை ஆராய்கின்றார். இதனை அடுத்து நூலாசிரியர் உரையாசிரியர்களின் வரலாற்றினைச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார், நூலாசிரியர் காலம் 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகவும் உரையாசிரியரின் காலம் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியாகவும் எடுத்துக் கூறுகின்றார்; போற்றிப் பஃறொடை மூலத்தைத் தடித்த எழுத்துக்களில் முதலில் தந்து, பின்னர் அப் பகுதிக்குப் பதவுரை தரப்பெற்றுள்ளது. இதே முறை நெஞ்சுவிடு தூதுக்கும் அமைந்துள்ளது. கொடிக்கவியும், உண்மை விளக்கமும் விருத்தப் பாக்களால் ஆனமைபற்றி, ஒவ்வொரு விருத்தத்தையும் முதலில் தந்து, பிறகு பதவுரை, கருத்துரை, விளக்கவுரைகள் தரப்பெற்றுள்ளன. நெஞ்சுவிடு தூது 25-ஆம் கலிவெண்பாவில் வந்துள்ள 'தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த' என்ற பகுதிக்கு இவ் வுரையாசிரியர் தரும் உரையினின்று, திருவள்ளுவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தமது நூலை அரங்கேற்றம் செய்தபோது, சங்கப்பலகை குறுகி நாற்பத்தொன்பது புலவர்களையும் வீழ்த்திய செய்தி அறியப் பெறுகின்றது.

---

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

27-ஆம் கலிவெண்பாவிலுள்ள கண்வலையிற்பட்டுக் கலவிக்கலை பயின்று என்ற பகுதிக்குக் கூறப்பெறும் பொருளினின்று, அக்காலத்து, கொக்கோகத்தைத் தவிர்த்து, ஏனைய அமரகம்போன்ற அகப்பொருள் நூல்களும் இருந்தனவாக அறியலாகின்றோம். இந்த உரையின் பெருமையைப் பற்றிப் பதிப்பாசிரியர் கூறியுள்ளது மிகவும் பொருத்த மாகக் காணப்படுகின்றது. அவர் கூறியிருப்பது, 'இவர்கள் அருளிய உரைகள் யாவும் இனிய, எளிய நடையில் அமைந்துள்ளன; உதா ரணங்களைக் கொண்டு பொருளை நன்றாக விளக்கிக் காட்டுவன; அநு பவங் கலந்த சொல்லும் பொருளும் நம்முடைய மனத்தைக் கவர்ந்து ஒருவழிப் படுத்துவன; இயல்பாலமைந்த சிவ புண்ணியப் பெருக்கால் தாம் மெய்கண்ட சந்ததியிலே பெற்ற சிவஞானத்தை வாரி வாரி வழங்கும் நிலை எவராலும் போற்றத்தக்கது' என்பதாகும்.

இந் நூல் நன்கு துப்புரவாக அச்சிடப்பெற்றுள்ளது. 'ஆதீன வெளியீடுகள்' என்ற பகுதி நூலின் இறுதியில் பிற்சேர்க்கையாகத் தந் திருப்பின் சிறக்கும்.

இத்தகைய நூல்களை வெளியிடுவதன் மூலம் திருவாவடுதுறை ஆதீனம் பொதுவாகத் தமிழுக்கும் சிறப்பாகச் சைவத்துக்கும் சிறந்த தொண்டு ஆற்றிவருவது பாராட்டத் தக்கது.

இந்தப் பதினன்கு மெய்கண்ட சாத்திரங்களையும் அவற்றின் உரைகளையும் இதர மொழிகளில் வெளியிடுவதற்கான துறைகளில் ஆதீனம் கவனம் செலுத்துமாயின் அது தமிழுக்கும் சைவத்துக் கும் உலகப் பாராட்டைத் தேடித் தருவதாகும்.

ப. ஜோதிமுத்து.

காளிங்கராயன் தில்லைத்திருப்பணிகள்

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

சைவவுலகுக்குத் தனி நாயகம் தில்லைத் திருப்பதி. தில்லையம்பலத்தில் திருக்கூத்து இயற்றும் பெருமான் சைவநன்மக்கள் பரவும் முழுமுதற் கடவுள். நிலம், நீர், நெருப்பு, காற்று, வளி என்ற ஐம்பெரும் பூதங்களும் தன் அடியிலும் முடியிலும் கைகளிலும் தாங்கி அவையனைத்தும் சுழன்றுமாறு ஆடல்புரியும் ஆடல்வல்லான். அவனது ஆட்டத்தில் நாட்டங் கொள்ளாத உயிர்ப் பொருள், உயிரில் பொருள் என்ற இருவகைப் பொருளில் எப்பொருளும் கிடையாது. காலஞ்சென்ற விஞ்ஞானப் பெரும்புலவரான அயின்ஸ்டன் தன் புறக்கண் அகக்கண் என்ற கண்ணிரண்டாலும் கவின்பெறக்கண்டு காதலித்து வியந்து நின்றாரெனின் இந்நாளில் உள்ள அறிஞர் பிறரைக் கூறுவது வேண்டா.

சுமார் 1000 ஆண்டுகட்கு முன் தோன்றி மிக்க சிறப்புற்று விளங்கிய சோழப் பேரரசர் அனைவர்க்கும் தில்லைப்பெருமான் குலமுதலாக விளங்கினான். முதல் இராசராசன் என்ற பெருவேந்தன் தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய பெருஞ்செய் ஆடவன்; எனினும் அதில் அவன் பொறித்த கல்வெட்டுக்களில் அளவைகளும் பிறவும் ஆடவல்லான் என்ற பெயர் தாங்கி அம்பலக் கூத்தன்பால் அவனுக்கிருந்த பேரன்பினைப் புலப்படுத்துகின்றன. சோழவேந்தர்கட்கு முன்னர் தமிழகத்தில் இருந்து அரசு புரிந்த பல்லவர்களின் பழையோன் ஒருவன் தில்லையம்பலத்திற் பொன் வேய்ந்தான் என்பது வரலாறு. அவர்கட்குப் பின் சோழவேந்தர்கள் முன்னின்று தில்லைப்பெருங் கோயிலைப் பொன் வேய்ந்தும், பொற்பணியும் பொற்கலமும் பல செய்தளித்தும் பொன்னம்பலப் பொற்கோயிலாக்கினர். பொருளிற் சிறந்த பொன் வேய்ந்து எல்லாப் பொருளையும் தோற்றுவித்து இயக்கும் இயவுளாகிய ஆடலரசை மனமணியாகக் கொண்டு, சிவாகமங்கள் இருபத்தெட்டினும் முடிமணியாய்த் திகழும் மகுடாகமத்தைச் செயல்வகையாகக் கொண்டு சிறந்து விளங்குவதால் கோயில் என்பது தில்லைப் பெருங்கோயில்.

இப்பெருங்கோயிலுக்கு அவ்வப்போது திருப்பணி செய்தவருள் பெரும் புகழ்பெற்ற அரசர்களேயன்றிப் பெருஞ்செல்வரும் பலர். தில்லைக்கோயிலில் உள்ள சிவகங்கையின் மேற்கில் உள்ள மண்டபமும், கோயிலைச் சூழ்ந்து நிற்கும் திருமதிலும் அமைத்துத் திருப்பணிசெய்த திருவாளன் காளிங்கராயன் என்ற பெருமகன். இவனுக்கு நரலோக வீரன் என்ற சிறப்புப் பெயருண்டு.

அதனால் தில்லைத் திருச்சுற்று நரலோகவீரன் என்றபெயர் தாங்கி நிற்கிறது. இவனது ஊர் தொண்டை நாட்டிலுள்ள மணவூர். இவனது இயற்பெயர் கூத்தன் என்பது. இதனால் இவன் மணவிற்கூத்தன் எனக் குறிக்கப் பெறுவான். இவனுக்கு அரும்பாக்கிழான் பொன்னம்பலக் கூத்தன், தொண்டைமான், நரலோக வீரன், அருளாகரன், மானுவதாரன், காலிங்கர் கோன், காலிங்கராயன் என்பன முதலிய சிறப்புக்கள் உண்டு. இவற்றுள் பெரிதும் பயின்று வழங்கும் பெயர் காளிங்கராயன் என்பது. கி. பி. பதினோராம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி விளங்கிய முதற் குலோத்துங்கன் காலத்திலும் அவன் மகன் விக்கிரமசோழன் ஆட்சியிலும் அரசியற் பணியில் இருந்து புகழ் மிகுந்து விளங்கியவன் இக் காளிங்கராயன். காளிங்கராயனுடைய திருப்பணிகள் தொண்டைநாட்டிலும் சோழநாட்டிலும் உள்ள வேறு சில கோயில்களில் உண்டு; என்றாலும் தில்லைப் பெருங்கோயிலிற் சிறந்துள்ளவை அழகிய இனிய பாட்டுவடிவில்நிற்கும் பண்பு மேம்பட்டவை. இப் பாட்டுக்களிற் பிறக்கும் ஐயங்கள் திருவதிகையிற் காணப்படும் பாட்டுக்களால் தெளிவடையுமாறு அமைந்துள்ளன.

தில்லைப் பெருங்கோயிலுக்கு ஏற்றம் தருவது பொன் வேய்ந்த திருச்சிற்றம்பல மாகலான், அதற்கு மேன்மேலும் பொன் வேய்ந்து பொலிவு குன்றாவாறு பணிசெய்வது பொன் பெற்றார் செய்யும் முதற்பணி. அதனால் எடுத்த எடுப்பிலே காளிங்கராயன் பணிகளுள் தலையாயது இது என்றற்கு, "எல்லைக் கடலால் இகல்வேந் தளக்கவந்த, செல்வமெல்லாம் தில்லைச்சிற் றம்பலத்துத் தொல்லைத், திருக்கொடுங்கை பொன்வேய்ந்தான்" என்றும், அதனை அடுத்துத் திருக்கோயிலைச்சுற்றி நிற்கும் திருமதிலைப் பெரும்பொன் செலவிட்டுப் பொற்பாக அமைத்தான் என்பதை, "தில்லையில் பொன் னம் பலத்தைச் செம்பொனால் வேய்ந்தவான், எல்லையைப்பொன் னாக்கினான் என்பரால்" என்றும் இப் பாட்டுக்கள் கூறுகின்றன.

சிற்றம்பலத்தின் எதிரில் நிற்கும் பேரம்பலம் காளிங்கராயன் திருப்பணிக்கு இலக்காகியபோது, செம்பினால் அதனைவேய்ந்தான். தில்லைநாயகற்குக் கோயில் பொன்னாகிய போது உள்ளீடாகிய பரிகலங்களும் பிறவும் பொன்னால் அமைவதே பொற்பு என்று கருதி "ஏனைவட அரசர் இட்டிடைந்த செம்பொன்னால்" பரிகலங்கள் செய்து தந்தான். இவ்வாறே கோயிலுக்கு வேண்டுகோளம், கர்ப்பூர நெடுவிளக்கு, திருச்சுற்று மாளிகை முழுதும் பொன் விளக்கு முதலியன அவன் வழங்கிய பொருள்கள். தில்லைப்பெருமானுக்குப் பாலமுது பரிமாறவும் ஆயிர நாழி (படி) அளவில் நெய்யாடி வரவும் நிவந்தங்கள் பல நம் காளிங்கராயன் அமைத்துள்ளான்.

தில்லைப்பெருமானுக்குத் தில்லையம்பலமேயன்றி அவனைச் செந்தமிழ்ப் பாக்களாற் பாடிப் பரவிய பெருமக்களின் திருமுறையும் பெருங்கோயிலாத லால் அத் திருமுறை பற்றிக் காளிங்கராயன் செய்த திருப்பணி இன்று யாவரும் நன்கு போற்ற வேண்டிய தொன்று. சிவகங்கையின் மேற்கில் நிற் கும் பழமையான மண்டபத்தைக் காளிங்கராயன் திருமுறை ஓதுவதற்கும் அதனைப் பலரும் இருந்து கேட்டு இறையருள் பெறுதற்குமாகக் கட்டினான். இதனை, "நட்டப் பெருமானார் ஞானம் குழைத்தளித்த சிட்டப் பெருமான் திருப்பதியம் முட்டாமைக், கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்" என்று கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. மேலும் ஏட்டிலுள்ள திருமுறை கள் நாளடைவில் பழமையுற்றுக் கிழிந்துபடுவது கண்டு அவற்றைச் செப் பேட்டில் எழுதிவைத்த பெருமை நமது காளிங்கராயனுக்கு உண்டு. இதனை

"முத்திறத்தாரீசன்முதற்றிறத்தைப்பாடியவர்
ஒத்தமைத்தசெப்பேட்டின்உள்ளெழுதி—இத்தலத்தின்
எல்லைக்கிரிவாய்இசையெழுதினான்கூத்தன்
தில்லைச்சிற்றம்பலத்தேசென்று"

என்று கல்வெட்டுக்கூறுகிறது. இச்செயல்பற்றி இவனைத் திருமுறை செப் பேடுகண்ட பெருமான் என்றும் அந்நாளைய மக்கள் பாராட்டியிருக்கின்ற னர். இத்திருமுறை ஆசிரியர்களுள் முன்னணியில்வைத்துப் பேசப்படுபவர் திருஞானசம்பந்தர். தில்லைப்பெருங்கோயிலில் திருஞானசம்பந்தர்க்கு ஓர் அழகிய கோயில் அமைத்து அதனையும் நம் காளிங்கராயன் சிறந்த முறையில் பொன்வேய்ந்து,

"தென்வேந்தர் கூன்நிமிர்த்த செந்தமிழர் தென்கோயில்
பொன்வேய்ந்து திக்கைப் புகழ்வேய்ந்தான்"

என்று சான்றோர் பாராட்டியுள்ளனர். பிற்காலத்தே திருக்கோயில் திருப் பணியில் ஈடுபடும் செல்வர்கள் தோன்றினரேயன்றி நம் காளிங்கராயன் போலத் திருமுறைகளாகிய திருக்கோயிலுக்குரிய பணிசெய்வோர் அரிய ராயினர். அதனால் திருமுறைகள் செல்வாக்கிழந்தன. இந்நாளில் திருந்திய கல்வியும் பொருந்திய செல்வமும் உடைய செல்வர் பலர் முன்வந்து திருப் பணிபுரியும் விருப்பினராக உள்ளனர். அவர்கள் பலரும் இத்திருப்பணி நலத்தால் தில்லையம்பலப்பெருமான் திருவருளால் காளிங்கராயன் போன்று நரலோக வீரர்களாய் நாடுபுகழும் நலம் பெறுவார்களாக.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணூநூல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச் சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4–8–0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4–0–0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.